# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No.110/2024

dated : 26.04.2025

P.W.1

Name விஜயன்

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு முதல் விசாரணை அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

| | |
|---|---|
| வா.சா.ஆ.17 | என்னுடைய தந்தையும் எனது சகோதரர்களும் சேர்ந்து பாகப்பிரிவினை செய்து கொண்டதை உறுதிப்படுத்தி ஏற்படுத்திக் கொண்ட யாதாஸ்து |

**குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.17 ஆவணம் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான மற்ற ஆவணங்களுடன் சேர்ந்தே வைக்கப்பட்டிருந்தது. வா.சா.ஆ.17 என் வசம்தான் இருந்தது. வா.சா.ஆ.17 ல் கூறிய நகல் அனைவரிடமும் இருப்பதாக அதில் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 யார் தட்டச்சு செய்யப்பட்டது என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.17 ல் சாட்சி நபர்கள் எவரும் கூறப்படவில்லை என்றால் சரிதான். 1வது தபசில் சொத்து தாயார் சீதாலட்சுமிக்கு ஒதுக்கப்பட்டதாகும். எனக்கு 5வது தபசில் ஒதுக்கப்பட்டது. வா.சா.ஆ.17 எழுதப்பட்ட நாளில் என் தந்தை உயிருடன்தான் இருந்தார். வா.சா.ஆ.17 ல் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களுக்கு கதவு எண் ஏதும்குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நஞ்சை, புஞ்சை நிலங்களுக்கும் புல

எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் எனக்கு கதவு எண் புல எண் தெரியும். ஆனால் வா.சா.ஆ.17 ல் கூறப்படவில்லை. வா.சா-ஆ-17 ல் என் தந்தைக்கும் அவரது சகோதரருக்கும், அவர்களது தந்தைக்குமிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவோ அதனடிப்படையில் பாகம் ஒதுக்கப்பட்டதாகவோ விவரங்கள் ஏதும் கூறப்படவில்லை என்றால் சரிதான். இராமகிருஷ்ண ராஜாவுக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று வழக்குரையிலோ முதல்விசாரணை வாக்குமூலத்திலோ துலங்காது என்றால் சரிதான். நாங்கள் செய்துகொண்ட குடும்ப ஏற்பாடு பாட்டி மஞ்சம்மாளுக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். 10.07.1987 வா.சா.ஆ.17 ஏற்படுத்தப்பட்டது. வா.சா.ஆ.17 எழுதப்பட்ட இரண்டு நாட்களுக்கு முன்பு நாங்கள் பாகம் பிரித்துக் கொண்டோம். நான் கூறுவதுபோல் ஒருபோதும் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும் வா.சா.ஆ.17 ஆவணம் வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்னர் வா.சா.ஆ.17 ஆவணம் ஏற்படும் முன்பாக பட்டா, சொத்துவரி ஆகியவற்றில் பெயர் மாற்றம் செய்து கொண்டிர்களா என்றால் இல்லை. நாங்கள் முன்னதாக யார் யார் முன்னிலையில் பாகம் செய்துகொண்டோம் என்ற விவரம் வா.சா.ஆ.17 ல் துலங்காது என்றால் சரிதான். எந்தெந்த பெரியவர்கள் முன்னிலையில் பாகம் செய்து கொண்டோம் என்று துலங்காது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் பாகம் ஏற்பட்டதாக மஞ்சம்மாள் எழுதி வைத்தாக கூறப்படும் உயிலில் கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் எங்கள் குடும்பத்தில்

ஒருபோதும் பாகம் ஏற்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக பாகம் ஏற்பட்டுவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மஞ்சம்மாள் ஏற்படுத்தியதாக கூறப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் அது உண்மையானதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.26 17:01:59 +0530